**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.</u>**
**<u>அசல் வழக்கு எண்.53/2022</u>**

பெயர்–திரு. மகேந்திரன் நாள்.04.02.2026

வா.சா.2 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**வா.சா.2 : பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை–**

எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியும் நான் ஒன்பதாம் வகுப்பு வரை படித்துள்ளேன். நீதிமன்றத்தில் இருந்து சாட்சி சொல்ல அழைப்பாணை வரவில்லை. வாதி அழைத்ததால் வந்தேன். வாதி எனக்கு தூரத்து சொந்தம். பிரமாண பத்திரத்தில் உள்ள வாசங்களை வாதிதான் சொன்னார். அதில் உள்ள விவரங்களை படித்துத் பார்த்தேன் அதில் உள்ள விவரங்கள் பொய்யானவை என்றால் சரியல்ல. பிரதிவாதியை தெரியும், அவருக்கு 80 வயது என்றால் சரிதான். நான் ஆசனூர் ஓங்கல்வாடியில் கதவு எண்.2/74 என்றால் சரிதான். வாதி என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால், பிரதிவாதி தாவா இடத்தை உரிமை கொண்டாடுவதாக தாக்கல் செய்துள்ளார். பிரதிவாதி என்ன எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்று எனக்கு தெரியாது. வாதியிடன் பிரதிவாதி சண்டை போட்டது மட்டும் தெரியும்,. நான் ஊர் பஞ்சாயத்து தலைவரா என்றால் இல்லை. தாவா சொத்தின் காலை எண் தெரியாது, விஸ்தீரண சுமார் 2 செண்ட் இருக்கும். வாதியின் ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. வாதியின் பெயரில் உள்ள பட்டாக்களை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. வாதியின் வீட்டின் காலை எண் தெரியுமா என்றால் தெரியாது. வாதியின் கணவரும், பிரதிவாதியின் அண்ணன் தம்பி என்றால் சரிதான். இருவரும் நஞ்சப்பாவின் மகன்கள் என்றால் சரிதான். பசுவராஜ் உயிருடன் இருக்கும் போது பிரதிவாதியின் மகள் சுலோச்சனாக்கு கிரையம் கொடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது, சுலோச்சனாவை எனக்கு தெரியும், சுலோச்சான கிரையம் வாங்கியதிலிருந்து சுலோச்சனா தான் காலியிடம் 374/17B இடத்தை அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல.

சுலோச்சனா ஊருக்கு வந்ததில்லை. தாவா சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. பிரமாண பத்திரத்தில் வாதி மற்றும் பிரதிவாதியின் உறவினர் இடையே தகராறு ஏற்பட்டது என்று கூறியுள்ளேன். அதில் பிரதிவாதியின் உறவினர் என்பது பிரதிவாதியின் பேரன்கள் ஆகும். என சமாதானம் செய்தேன் என்றால் சண்டை போட வேண்டாம் என்று சொன்னேன். மேற்படி இடத்தில் வேறு யாரும் இல்லை. பிரமாண பத்திரத்தில் கூறியுள்ளபடி எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை பிரதிவாதிதான் அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. அது தெரிந்தும் வாதிக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/ her to be correct.

SELVAM SUSILA

Digitally signed by SELVAM SUSILA
Date: 2026.02.04 16:12:50 +0530

District Munsif